



## கூட்டுறவு, உணவு மற்றும்
## நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# கூட்டுறவு

## மானியக் கோரிக்கை எண். 12

### அறிவிப்புகள்
### 2022–2023


**இ. பெரியசாமி**

கூட்டுறவுத் துறை அமைச்சர்

# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# கூட்டுறவு

மானியக் கோரிக்கை எண். 12

அறிவிப்புகள்

2022 – 2023

**1. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் நகரும் கூட்டுறவு வங்கிச் சேவை அறிமுகப்படுத்தப்படும்.**

அனைவருக்கும் வங்கிச்சேவை என்ற நோக்கத்துடன், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 'நகரும் கூட்டுறவு வங்கி' என்ற புதிய சேவை அறிமுகப்படுத்தப்படும். மக்களுக்கு அவர்தம் வசிப்பிடங்களிலேயே மைக்ரோ ஏடிஎம் / TAB மூலம் வங்கி சேவைகளை வழங்கும் பொருட்டு இந்த வங்கிகளுக்கு, ஒரு வாகனத்திற்கு தலா ரூ.**16.74** இலட்சம் வீதம் மொத்தம் ரூ.**569.00** இலட்சம் செலவில் 34 வாகனங்கள் வழங்கப்படும்.

**2. சென்னை அண்ணாநகரில், பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு சொந்தமான இடத்தில் புதிய அலுவலக கட்டடம் கட்டப்படும்.**

சென்னை அண்ணாநகரில், பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு சொந்தமான இடத்தில், இரண்டு அடுக்கு அலுவலகத்துடன் கூடிய சுயசேவைப்பிரிவு மற்றும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடை, ரூ.450.00 இலட்சம் மதிப்பில், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து கட்டப்படும்.



**3. கூட்டுறவுத் துறைக்கான ஒருங்கிணைந்த பயிற்சிக் கொள்கை உருவாக்கப்படும்.**

கூட்டுறவு நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்க ஏதுவாக, ஒருங்கிணைந்த பயிற்சிக் கொள்கை உருவாக்கப்படும்.

**4. கூட்டுறவு வங்கிகளில் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையை, ரூ.12.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சமாக உயர்த்தப்படும்.**

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகரக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள், பெரும்பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் ஆகிய கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு அதிகபட்சமாக ரூ.12.00 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வரசு மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ளதால், 2022-23 - ஆம் நிதியாண்டு முதல் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன் உச்சவரம்பு ரூ.12.00 இலட்சத்தில் இருந்து ரூ.20.00 இலட்சமாக உயர்த்தப்படும்.



**5. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமாக உள்ள விதை நெல் உற்பத்தி நிலையம் புதுப்பிக்கப்படும்.**

டெல்டா பாசனப்பகுதி விவசாயிகளின், விதை நெல் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமாக உள்ள விதை நெல் உற்பத்தி நிலையம், வருடத்திற்கு 1000 மெ.டன் அளவிற்கு, சான்றளிக்கப்பட்ட விதைகள் உற்பத்தி செய்திடுவதற்கு ஏதுவாக, ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

**6. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமான பாமணி உர ஆலையில் புதியதாக வேப்ப விதைத்தூள் மற்றும் வேப்பம்பிண்ணாக்கு உற்பத்தி அலகு நிறுவப்படும்.**

தமிழ்நாட்டில் இயற்கை விவசாயத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமாக உள்ள பாமணி உர ஆலையில், புதியதாக வருடத்திற்கு **1,500** மெ.டன் வேப்ப விதைத்தூள் மற்றும் வேப்பம்பிண்ணாக்கு உற்பத்தி அலகு ரூ.**25.00** இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.



**7. திண்டுக்கல் மாவட்டம் எரியோடில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமான இடத்தில், உயிரி உரம் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி அலகு அமைக்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள், உயிரி உரம் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லிகளை அதிகளவில் பயன்படுத்தி, இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள எரியோடில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமான இடத்தில் அந்நிறுவனத்தால் உயிரி உரம் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி அலகு, ரூ.**125.00** இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**8. திண்டுக்கல் மாவட்டம் எரியோடில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமான இடத்தில் நுண்ணூட்டச்சத்து கலப்பு உர அலகு அமைக்கப்படும்.**

பயிர்களில் ஏற்படும் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை களைந்து, உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், திண்டுக்கல் மாவட்டம் எரியோடில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலம் வருடத்திற்கு **1000** மெ.டன் அளவு உற்பத்தி திறன் கொண்ட நுண்ணூட்டச்சத்து கலப்பு உர அலகு ரூ. **50.00** இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.



**9. மாநில அளவிலான பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் இணையம் அமைக்கப்படும்.**

மலைவாழ் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில், சிறு வனப் பொருட்களின் கொள்முதல், உற்பத்தி செய்யப்படும் விவசாய விளைபொருட்களை பதனிடுதல், மற்றும் விற்பனையை மேம்படுத்திடவும், வேலை வாய்ப்புகளை உறுதி செய்யவும், அரசின் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்துவதை கண்காணிக்கவும், மாநில அளவிலான பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் இணையம் அமைக்கப்படும்.

**10. கூட்டுறவு சங்கங்களின் அனைத்து தயாரிப்புகளையும் விற்பனை செய்வதற்கு ஒரு பொதுவான கைப்பேசி செயலி (Mobile App) உருவாக்கப்படும்.**

கூட்டுறவு சங்கங்களின் அனைத்து தயாரிப்புகளையும் சந்தைப்படுத்த, ஒரு பொதுவான சந்தைப்படுத்துதல் தளம் உருவாக்குவது அவசியமாகிறது. எனவே, கூட்டுறவுகளின் அனைத்து தயாரிப்புகளையும் பெரிய அளவில் சந்தைப்படுத்துவதற்கு, மாநில அளவிலான ஒரு பொதுவான கைப்பேசி செயலி **(Mobile App)** உருவாக்கப்படும்.



**11. திருப்பூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு புதிய தலைமை அலுவலகம் கட்டப்படும்.**

திருப்பூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு புதிய தலைமை அலுவலகம் ரூ.**52.00** இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**12. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் திருச்சிராப்பள்ளி மண்டல அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.**

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் திருச்சிராப்பள்ளி மண்டல அலுவலகத்திற்கு ரூ.350.00 இலட்சம் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய அலுவலக கட்டடம் கட்டப்படும். இதற்கான செலவினம், ரூ.250.00 இலட்சம் வங்கியின் சொந்த நிதியிலிருந்தும், ரூ.100.00 இலட்சம் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்தும் மேற்கொள்ளப்படும்.



**13. கோவை மாவட்டம், துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா சங்கத்திற்கு கூடுதலாக உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.**

சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு, கோவை மாவட்டம் , துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா சங்கத்திற்கு 1000 சதுர அடி பரப்பளவில் வேளாண் விளைப் பொருட்களை உலர வைக்க, சூரிய உலர்கலன்கள், புதிய மின் வாகனம் (E-vehicle) கொள்முதல், மற்றும் சங்க தலைமை அலுவலக கட்டடத்தை நவீனப்படுத்துதல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**14. கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளுக்கு கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்..**

திருவண்ணாமலை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு ரூ.**40.00** இலட்சம் மதிப்பில் **200** மெட்ரிக் டன் கிடங்கு கட்டப்படும், மற்றும் ரூ.**4.00** இலட்சம் மதிப்பில் பொட்டலமிடும் இயந்திரம் நிறுவப்படும்.

மதுரை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையால், செக்காணூரனியில் ரூ.**2.50** இலட்சம் மதிப்பீட்டில் புதிய சுயசேவைப்பிரிவு அமைக்கப்படும், மற்றும் அழகப்பன் நகர் இன்டேன் எரிவாயு பிரிவு ரூ.**5.00** இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான மயிலாப்பூர் மற்றும் மாதவபுரத்தில் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் சென்னை மத்திய கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடங்கள் முறையே ரூ.**101.00** இலட்சம் மற்றும் ரூ.**51.50** இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

இதற்கான மொத்த செலவினம் ரூ.**204.00** இலட்சம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.



**15. மதுரை, வேலூர், தூத்துக்குடி மற்றும் கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தலைமை அலுவலகங்கள் நவீனமயமாக்கப்படும்.**

கூட்டுறவு வங்கிகளின் தோற்றப் பொலிவினை மேம்படுத்துவதன் மூலம் வணிக வங்கிகளுக்கு இணையான நவீன வங்கியியல் அனுபவத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்கிடவும், வங்கிகளின் வணிக அளவை உயர்த்திடும் நோக்குடனும் மதுரை, வேலூர், தூத்துக்குடி மற்றும் கடலூர் ஆகிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தலைமை அலுவலகங்கள் வங்கிகளின் சொந்த நிதியிலிருந்து ரூ.**200.00** லட்சம் செலவில் நவீனமயமாக்கப்படும்.

**16. செங்கல்பட்டு மற்றும் கடலூர் மாவட்டத்திலுள்ள இரண்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் நவீனமயமாக்கப்படும்.**

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் வணிகம் மற்றும் வருவாயை அதிகரிக்கவும், மக்கள் பயன் பெறவும், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள முள்ளிப் பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கமும், கடலூர் மாவட்டத்தில் உள்ள தொட்டிக்குப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கமும், தலா ரூ.**20.00** இலட்சம் வீதம், ரூ.**40.00** லட்சம் மொத்த செலவில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியுதவி பெற்று நவீனமயமாக்கப்படும்.



**17. கடலூர் மற்றும் வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.**

வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கி வசதிகளை வழங்கிடவும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும், கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பண்ருட்டி கிளை ரூ.**120.00** இலட்சத்திலும், வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் வாலாஜாப்பேட்டை கிளை ரூ.**80.00** இலட்சத்திலும் வங்கிகளின் சொந்த நிதியில் இருந்து மொத்தம் ரூ.**200.00** லட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

**18. இருபத்திரண்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.**

கூட்டுறவு கடன் நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், வாடிக்கையாளர்களுக்கு நவீன வசதிகளை வழங்கவும் திருப்பூர், திருவள்ளூர், சேலம், செங்கல்பட்டு, கடலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள **22** தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு தலா ரூ.**30.00** இலட்சம் வீதம் மொத்தம் ரூ. **660.00** லட்சம் செலவில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து புதிய கட்டடங்கள் கட்டப்படும்.



**19. தூத்துக்குடி மற்றும் கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு நான்கு புதிய கிளைகள் துவக்கப்படும்.**

கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு, அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் வங்கிச் சேவைகளை வழங்குவதற்காக, தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் ஒரு புதிய கிளை நாகலாபுரத்தில் ரூ.**30.00** லட்சம் செலவிலும், கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் **3** புதிய கிளைகள் கருவேப்பிலங்குறிச்சி, குள்ளஞ்சாவடி, வண்டிப்பாளையம் ஆகிய இடங்களில் ரூ.**105.00** லட்சம் செலவிலும் என மொத்தம் **4** கிளைகள் ரூ.**135.00** லட்சம் வங்கிகளின் சொந்த நிதியில் துவக்கப்படும்.

## 20. திருச்சிராப்பள்ளி மற்றும் கடலூர் மாவட்ட கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

திருச்சிராப்பள்ளி மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகத்தில் ஒரு பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை ரூ.**10.40** இலட்சம் செலவிலும், திருச்சிராப்பள்ளி மத்திய கூட்டுறவு வங்கியின் **5** கிளைகளில் ரூ.**25.00** இலட்சம் செலவில் இரும்பு பெட்டகங்களும், திருச்சிராப்பள்ளி மத்திய கூட்டுறவு வங்கியின் 37 கிளைகளில் ரூ.**18.87** இலட்சம் செலவில் புதிய உட்சுற்று கண்காணிப்பு நிழற்பட கருவிகளும். கடலூர் மாவட்டத்தில் **2** தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ரூ.**6.00** இலட்சம் செலவில் வாடிக்கையாளர் பாதுகாப்பு பெட்டகங்கள் என ஆகமொத்தம் ரூ.**60.27** இலட்சம் மதிப்பீட்டில் கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பு அம்சங்கள் மேம்படுத்தப்படும்.

**இ. பெரியசாமி**
**கூட்டுறவுத் துறை அமைச்சர்**